*13*

குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# ஒரு திருமணத்தை உருவாக்கும் அல்லது முறிக்கும் வாழ்க்கை முறைமைகள் – மாம்சம் மற்றும் ஆவி

## (கலாத்தியர் 5:16–26)

*நாம் சூழல் காற்று, பூமியதிர்ச்சி, இயற்கை சீற்றம் ஆகிய அநேக விதமான அழிவுகளால் கலங்கியிருக்கிறோம். ஆகிலும் அதற்கு இணையான மற்றொரு அழிவு ஆண்டாண்டுகளாக சமூகங்களில் கலங்கச் செய்கிறது: அது குடும்பத்தில் ஏற்படும் பிளவுகளாகும்.*

*அநேகமாக நாற்பது சதவிகித முதல் திருமணங்கள் அமெரிக்காவில் விவாகரத்தில் மிகவும் நாசகரமான முடிவு பெருகிறது. பெரும்பாலான தம்பதிகள் எந்தவிதமான சந்தோஷமும் இல்லாமல் இணையற்று வாழ்கிறார்கள். சிலர் தங்கள் பிள்ளைகளிமினித்தம் வாழ்க்கை சக்கரத்தில் ஒடிக் கொண்டிருக்கின்றனர். திருமண உறவு முறையில் துணைவர்களில் ஒருவருமே எந்தவிதமான சந்தோஷமும் பெறுவதில்லை.*

*இந்த பிரச்சனையை தீர்க்க வழி ஏதாவது உண்டா? இப்படிப்பட்டதான சிக்கல்கள் தீர்க்கப்பட மனித சக்திக்கு அப்பாற்பட்டவைகளாக காணப்படுகின்றன. தெய்வீக இடையீடு அவசியமானதாக இருக்கிறது.*

*இதுவே குடும்பத்தைப் பற்றின பாடத்தின் கருத்தாக இருக்கிறது. நம்முடைய குடும்பம் சந்தோஷமானதாகவும், வெற்றிகரமானதாகவும இருக்க வேண்டுமானால் மேலிருந்து தெய்வீக உதவி அவசியமானதாகும் - குறிப்பாக பரிசுத்த ஆவியானவரின் உதவி அவசியமானதாகும். நமது வசனப்பகுதி கலாத்தியர் 5:16-26:*

> பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. ஆவியினால்

நடத்தப்படுவீர்களானால் நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை, கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

நாம் ஆவியானாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.

நமது அடிப்படை காரணத்தை கீழே வரிசைப்படுத்தலாம். குடும்பத்திலுள்ள நபர்களாகிய - அப்பா, அம்மா மற்றும் பிள்ளைகள் - பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவார்களானால் அவர்கள் ஆவிக்கேற்ற கனிகளை கொடுப்பார்கள். இப்படிப்பட்டதான குடும்பம், குடும்பத்திலுள்ளவர்களையும், தேவனையும் பிரியப்படுத்துவதாக இருக்கும்.

“வெற்றிகரமான” குடும்பம் என்று நாம் குறிப்பிடுவதினால் நாம் எந்த அர்த்தத்தை அறிவுறுத்துகிறோம். நாம் வெற்றிகரமான குடும்பம் என்பதை நான்கு வகையாக விளக்கலாம் (1) தேவனை பிரியப்படுத்தும் குடும்பம். (2) ஒரு கணவனும் மனைவியும் விவாகரத்து இல்லாமல் திருமணபந்தத்தில் மரிக்கும் வரை இணைந்து இருக்க வேண்டும். (3) சந்தோஷமான குடும்பம் என்பது ஒவ்வொரு நபரும் மகிழ்ச்சியாயும், போதுமென்கிற மனதோடும் மற்றும் சுய திருப்தி உடையவராக இருக்க வேண்டும். (சில தம்பதிகள் விவாகரத்தை தவிர்த்து வாழ்கிறார்கள் ஆனால் அவர்கள் சண்டை சச்சரவுகளால் பிளவுபட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட குடும்பத்தை வெற்றிகரமான குடும்பம் என்று கூற இயலாது.) (4) கிறிஸ்தவம் குடும்பத்திலிருந்து பிரகாசிக்கிறது.

இந்த நான்கு மடங்கு கருத்து நமது தொடர்வரிசையின் பாடங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. சில குடும்பங்கள் ஏற்கனவே மரணத்தினால் அல்லது விவாகரத்தால் பிளவுபட்டிருக்கிறது. மற்ற குடும்பங்கள், ஒரு தனிநபரைக் கொண்டதாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் எப்படி விவாகரத்தை தடுக்க வேண்டும், மற்றும் தனது வாழ்க்கைத் துணையோடு சந்தோஷமாக எப்படி வாழ்வது என்பதெல்லாம் இந்த தருணத்தில் பொறுத்தமற்ற கேள்விகளாகும். இருப்பினும், குடும்பம் எவ்வாறு தேவனைப் பிரியப்படுத்த முடியும் என்றும் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் மையமாக இருக்க முடியும் என்பதைக் கூறும் அறிவுரைகள் ஒருக்காலும் பொருந்தாததாக இருக்காது. ஒரு நபர் தனியாகவோ, புதிதாக திருமணமானவரோ, விவாகரத்து

ஆனவரோ, திருமணமாகி வளர்ந்த பிள்ளைகளை உடையவரோ, தூரத்தில் குடும்பத்தை விட்டு தனியாக வாழ்பவரோ, தன் வாழ்க்கை துணை மரித்ததினால் தனித்து இருப்பவர்களோ, அவர்களுடைய குடும்பம் கிறிஸ்து உலகத்தை ஆசீர்வதிக்கும்படியாக ஒரு கருவியாக இருக்கவேண்டும்.

இந்த பாடமானது எவ்வாறு நமது குடும்பம் மேற் சொல்லிய நான்கு கோட்பாடுகளை கடைபிடிக்க முடியும் என்பதை வலியுறுத்தும். குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரும் கலாத்தியர் 5:22, 23ல் கூறிய ஆவிக்கேற்ற கனிகளை கொடுக்கும் போது வெற்றி நிச்சயமாகிறது.

முன்னதாக, நாம் குடும்பத்தில் ஆவியின் கனியின் பலவித அம்சத்தை கலந்து ஆலோசித்து உபயோகிப்பதற்கு முன்பு, நாம் இன்னும் ஒருமுறை இந்த வசனப்பகுதியை வாசித்து, இவைகள் எவ்விதமாக நம்முடைய *தனிப்பட்ட* வாழ்க்கையில் செயல்படுகிறது என்று பார்க்க வேண்டும். இந்த பகுதியானது இரண்டுவிதமான வாழ்க்கை முறைமைகளை அளிக்கிறது. அதாவது மாம்சத்தின் வழியில் ஜீவிப்பது, மற்றும் ஆவியின் வழியில் ஜீவிப்பது. இந்த இரண்டு விதமான வாழ்க்கை முறைகளை தேர்ந்தெடுப்பதின் வாயிலாக திருமணம் மேம்படவோ அல்லது முறிவு ஏற்படவோ வாய்ப்புள்ளது.

## இந்த வசனப் பகுதியானது என்ன கூறுகிறது?

**சந்தர்ப்பம்**

கலாத்தியர் நிருபத்தில், பவுல் கள்ளப் போதகர்களை இவ்விதமாக சாடுகிறார், அவர்கள் கலாத்தியா சபையில் வந்து புறஜாதி கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டும் என்பதை போதித்தனர் - குறிப்பாக கிறிஸ்தவர்களாவதற்கு விருத்தசேதனம் செய்ய வேண்டும் என்றனர்.

அந்த கள்ள உபதேசத்தை தவறென நிரூபித்து, கலாத்தியர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டனர் என்று பவுல் வாதித்தார். அவர்கள் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் விடுதலையாக்கப்பட்டவர்கள் என்றார் (கலாத்தியர் 5:1)! ஆயினும் பவுல் தமது வாசகர்கள் தவறாக புரிந்து கொள்ளுவார்களோ என்று உணர்ந்து, இப்படியாக அவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையானதால், எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றும் அதற்கு எந்த தடையொன்றும் இல்லை என்று நினைப்பார்கள் என்றும் பவுல் கருதினார். அவர்களின் சுதந்திரமானது எந்த விதமான தடையற்றது என்று எண்ணிவிடக் கூடாது என்றும் அவர்களுக்கு கிடைத்ததான விடுதலையானது எந்த பாவத்தையும் செய்வதற்கு அனுமதிசீட்டாக பயன்படுத்திவிடக் கூடாது என்றும் (5:13); மாறாக அன்பின் பிரமாணத்தினால் அவர்கள் தங்களை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் அறிந்தி கொள்ள வேண்டும் என்று நினைத்தார் (5:14).

**கட்டளை**

அன்பின் பிரமாணத்தில் எப்படி நம்மை இணைத்துக் கொள்வது? பவுலின் அறிவுரை பிரகாரம் கலாத்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் “ஆவியின்படி

*நடக்கவேண்டும்" (வாழவேண்டும்) மற்றும் "மாம்ச இச்சைகளை நிறைவேற்றக் கூடாது" (5:16).*

## போராட்டம்

*இரண்டு கருத்துக்களான "ஆவி" மற்றும் "மாம்சம்" இவைகள் இரண்டும் வேறுபட்ட கோட்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவைகள் இரண்டும் வேறுபட்டு மனிதனுக்குள் ஒன்றோடு ஒன்று போர் செய்கிறது. பவுல் இதனை ரோமர் 7:23ல் "உள்நாட்டுப் போர்" என்று குறிப்பிடுகிறார்; "ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன், அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது."*

*நமக்குள்ளாக நடக்கிற இந்த உள்நாட்டு போரில் உள்ள இரண்டு உண்மைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். (1) இது கிறிஸ்தவர்களுக்கு சவால்விடுவதில் தொடர்கிறது. நாம் கிறிஸ்தவர்களாய் ஆனதினால், முற்றிலும் எல்லாவிதமான சோதனைகளுக்கு விலக்கப்பட்டிருக்கிறோம் என்று எதிர்பார்க்கலாகாது. இருப்பினும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களல்லாதவர்களை விட சிறந்தவர்களே, ஏனென்றால் நாம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ உதவி பெற்றிருக்கிறோம். இந்த உதவி ஆவியானவரிடத்திலிருந்து வருகிறது. (2) கோட்பாடுகள் - மாம்சத்திற்கு எதிராக ஆவி - எப்போதும் இருந்தாலும், ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் ஒன்று முதன்மை ஸ்தானத்தை எடுத்துக் கொள்கிறது. அதின் தாக்கம் வேறுபட்டு பல அளவுகளில் இருந்தாலும் ஒன்று நிச்சயமாகவே முக்கியத்துவம் ஆனதாக இருக்கும். இதினிமித்தம், நாம் மாம்சத்தின்படியோ அல்லது ஆவியின்படியோ எதின்படி நடக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முடியும்.*

## வேறுபாடு

*அதனை சாதிப்பதற்கு இருப்பதான அடையாளங்கள் என்ன? பவுல் மாம்சத்தின் வாழ்க்கை முறை மற்றும் ஆவியின் வாழ்க்கை முறையின் ஒப்பிட்டு அடிப்படைவேறுபாட்டை குறிப்பதன் மூலம் அதற்கு பதிலளிக்கிறார்.*

*எண்ணிக்கையில் வேறுபாடு இருக்கிறது.* மாம்சத்தின் வாழ்க்கை முறையைக் குறித்து குறிப்பிடும் போது மாம்சத்தின் "செயல்கள்" (பண்மை) ஆக சித்தரிக்கப்படுகிறது (கலாத்தியர் 5:19), ஆனால் ஆவியின் வாழ்க்கை முறைமையைக் குறித்து குறிப்பிடும் போது "கனி" (ஒருமை) என்று குறிப்பிடுகிறார். அவர் ஆவிக்குரிய கனிகள் என்று குறிப்பிடாமல் ஆவியின் கனி என்று வித்தியாசமாக ஒன்பது ஆவிக்குரிய பண்புகளை குறிப்பிடுகிறார். ஒருவேளை பவுல் மொத்தமாக, இதனை முக்கியத்துவப் படுத்தியிருக்கலாம். ஒருவேளை பவுல் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த எல்லாவிதமான நற்குணங்களும் உடையவராக வாழ்க்கை நடத்த வேண்டும் என்றும், எந்த ஒரு கிறிஸ்தவனும் இந்த பண்புகள் ஒன்றில் குறைவுள்ளவனாக காணப்பட்டால் ஆவியின் கனியில் குறைவுள்ளவனாக இருக்கிறான் என்றே வலியுறுத்துகிறார்.

*இந்த இரண்டு வாழ்க்கை முறைமைகளின் தொடக்கத்தில் வேறுபாடு இருக்கிறது.* இந்த மாம்ச வாழ்க்கை முறைமையின் தொடக்கம் எங்கே? இந்த

மாம்சத்தோடே! அல்லது வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் இந்த வாழ்க்கை முறைமை நம்மிடையே துவங்குகிறது! இதற்கு முற்றிலுமாக நாமே பொறுப்பாளிகளாகிறோம்.

இந்த ஆவியின் வாழ்க்கை முறைமைகள் எங்கு தொடங்குகிறது? ஆவியானவர் மூலமாய்! இந்த வாழ்க்கை முறைமைகள் பரலோகத்தை தொடக்கமாக கொண்டிருக்கிறது.

எப்படி பரிசுத்த ஆவியானவர் இந்த கனியை கொடுக்க முடியும்? அவர் நம்முடைய வாழ்க்கையில் அற்புதமாக கனிக்கொடுக்க இயலாது. அற்புதத்தின் காலம் (புதிய ஏற்பாட்டு காலகட்டத்தில் செய்யப்பட்டவை) முடிந்து போயிற்று. மாறாக, ஆவியானவர் இரண்டு வகையில் கனிகளை நம் வாழ்வில் கொடுக்கிறார். முதலாவது அவர் நமக்குள் வாசம் செய்து நாம் ஆவிக்கேற்ற வளர்ச்சியடைய உதவி செய்கிறார். எப்பொழுது என்றால் நாம் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும் போது. இரண்டாவதாக, அவர் ஏவிய தேவனுடைய வார்த்தையால் நம் வாழ்வில் மாற்றம் தரும் செல்வாக்கை உண்டாக்குகிறார். இந்த இரண்டு விதமான சிந்தனைகளுக்குள் போராட்டங்கள் இல்லை. நாம் அவருடைய வார்த்தைகளை படித்து கீழ்ப்படியும் போது நாம் பரிசுத்த ஆவியினால் இன்னும் அதிகமாக மற்றும் ஆவியில் வளர்கிறோம். இதற்கிடையில் நமக்குள் வாசம் செய்கிற பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வசனத்தின் செல்வாக்கினால் நம்மை பலப்படுத்தி உற்சாகப்படுத்துகிறார். அதிர்ஷ்டவசமாக நாம் இன்னும் வளர்வதற்கு உதவுகிறது. இப்படி ஆவிக்குரியதில் வளர்ந்து கொண்டிருக்கும்போது நாம் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட வார்த்தையில் இன்னும் அதிகமதிகமாக கீழ்ப்படிந்து ஆவிக்குரிய காரியத்தில் அதிகமாக வளர்வோம்.

இப்படியாக நாம் முக்கியமாக கூர்ந்து கவனிக்க வேண்டியது என்னவென்றால் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஒத்துழைப்பு இன்றித் தானாக கனி கொடுக்கமாட்டார் என்பதே. நாம் கனி கொடுப்பதில் மொத்தமாக செயலற்றவர்களாய் இருப்பதில்லை. பவுல் இவ்வாறாக கட்டளையிடுகிறார், "ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்" (5:16, 25). நாம் நடக்க வேண்டும்! அப்பொழுது ஆவியானவர் நம்மை நடத்துவதற்கு அனுமதிக்கும் போது அவர் நம் வாழ்வில் கனி கொடுப்பார்.

இந்த இரண்டு வாழ்க்கை முறைமைகளிலும் வேறுபாடான ஒரு குணாதிசயம் உள்ளது. பவுல் முதலாவது மாம்ச வாழ்க்கை முறைமைகளை விவரித்து காண்பித்தார் (5:19-21). மாம்சத்தின் கிரியைகளை ஐந்து வகைகளாக பிரிக்கலாம்: (1) சிற்றின்பப் பாவங்கள். (2) பொய்யான மதப்பாவங்கள். (3) மனோபாவத்தின் பாவங்கள். (4) பிரிவினையின் பாவங்கள். (5) கட்டுப்பாடின்மையான பாவங்கள்.

**சிற்றின்பப் பாவங்கள்**

- NASB - துன்மார்க்கம், தூய்மைக்கேடு, சிற்றின்பம்.
- NIV - பாலியல் சிற்றின்பம், தூய்மைக்கேடு, நெறிதவறி நடத்தல்.
- KJV - விபச்சாரம், வேசித்தனம், துப்புரவுக்கேடு, விரகம்.
- RSV - துன்மார்க்கம், தூய்மைக்கேடு, சிற்றின்பப் பற்றுள்ளது.

*பொய்யான மதப்பாவங்கள்*

- NASB - *விக்கிரகாராதனை, மாந்திரீகம்.*
- NIV - *விக்கிரகாராதனை, பில்லிசூனியம்.*
- KJV - *விக்கிரகாராதனை, பில்லிசூனியம்.*
- RSV - *விக்கிரகாராதனை, மாந்திரீகம்.*

*மனோபாவத்தின் பாவங்கள்*

- NASB - *பகை, சச்சரவு, பொறாமை, அபரிமிதமான கோபம்.*
- NIV - *காழ்ப்பு, முரண்பாடு, பொறாமை, சீற்றம்.*
- KJV - *காழ்ப்பு, வேறுபாடு, இகலாட்டம், கோபம்.*
- RSV - *பகை, சச்சரவு, பொறாமை, கோபம்.*

*பிரிவினையின் பாவங்கள்*

- NASB - *தகராறு, கருத்து வேறுபாடு, கட்சி பூசல்கள், பொறாமை.*
- NIV - *தன்னலம், கருத்து வேறுபாடு, கட்சி பூசல்கள், பொறாமை.*
- KJV - *சச்சரவு, கலக்கம், சமயபேதம், பொறாமை, கொலைகள்.*
- RSV - *தன்னலம், கருத்து வேறுபாடு, பிரிவினைகாரர்கள், பொறாமை.*

*கட்டுப்பாடின்மையான பாவங்கள்*

- NASB - *மதுபானவெறி, குடிகாரர், மற்றும் இவ்வகையை சார்ந்தவர்கள்.*
- NIV - *மதுபானபிரியர், களியாட்டம், மற்றும் இவ்வகையை சார்ந்தவர்கள்.*
- KJV - *மதுபானபிரியர், கேளிக்கை செய்பவர்கள், மற்றும் இவ்வகையை சார்ந்தவர்கள்.*
- RSV - *மதுபானபிரியர், கூத்தாடிகள், மற்றும் இவ்வகையை சார்ந்தவர்கள்.*

*பவுல் யாரைப்பற்றி விவரித்து காண்பிக்கிறார்? உலகத்தாரிடமா! நாம் முடிவுக்கு வருவதற்கு முன்பு, இப்படிப்பட்ட பட்டியல் நம்மை விவரிக்க முடியுமா அல்லது நமக்கு தெரிந்த நபர்களிடம் இப்படிப்பட்ட குணாதிசயத்தை காணமுடியுமா என்று நினைத்துப் பார்ப்போம். சில சமயங்களில் கீழ்கண்ட கூற்றை சிலர் கூறுவர்:*

> *குடியைப்பற்றி* - "நான் அவ்வளவாக குடிப்பது கிடையாது. எப்பொழுதாவது குடிப்பதுண்டு, ஆனால் எப்பொழுதும் அல்ல."
>
> *தன்னலம், விவாதம், அல்லது பொறாமையைப் பற்றி* - "நான் எப்பொழுதும் என்னுடைய வழியை வலியுறுத்துவதில்லை, நான் ஒருவரையும் என்னை அநியாயமாக மேற்கொள்ள விடமாட்டேன்! எனக்கு என்ன தகுதியோ அது எனக்கு தேவை!"; "நான் இந்த விவாதத்தை தொடங்கவில்லை; அவள் தான் தொடங்கினாள்!"
>
> *குரோதம், சந்தேகம் அல்லது கோபம் பற்றி* - "அவன் எனக்கு இதை செய்த போது, என் மனதில் என்ன நினைத்தேனோ அதை நான் சொன்னேன்!"; "அவன் இனி எனக்கு அப்படி செய்ய மாட்டான்! அவர்கள் ஏன் என்னை சுற்றி இருக்க வேண்டும்?" "என்னால் அவர்களை பொருத்துக் கொள்ள

*முடியவில்லை!"*

*பொய்யான மதத்தைப்பற்றி* - "நான் சபைக்குப் போக வேண்டியதில்லை; மதத்தைப் பற்றி எனக்கு தனிப்பட்ட அணுகுமுறை உண்டு. ஒரு மனிதர் சரியான வாழ்க்கை வாழும் போது அவனாவது அல்லது அவளாவது பரலோகத்திற்கு சென்று விடுவார்கள்."

*மணமாகாத ஆண் பெண்ணின் விருப்ப உடலுறவு அல்லது விபச்சாரம்* - "நீங்கள் உண்மையிலேயே அன்புள்ளவராய் இருந்தால் தற்காலிகமாக பாலியல் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்"; "ஆபாசத்தில் என்ன தவறு இருக்கிறது? அது யாரையும் காயப்படுத்துவதில்லை."

நாம் இப்படிப்பட்ட வார்த்தைகளை கேட்கும்போது - அல்லது அவைகளை நாம் பேசும் போது - அதுவே மாம்சத்திற்கேற்ற வாழ்க்கையின் ஆதாரமாகிறது. இப்படிப்பட்டதான சிந்தனைகள் மற்றும் வாசகங்கள் ஒரு சாதாரண உலக மனுஷனுடைய குணாதிசயத்தின் வெளிப்பாடு ("உலகத்தான்"). நாம் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட குணாதிசயத்தை விலக்குவதற்கு போராடவேண்டும்.

இதற்கு எதிர்மறையாக ஆவிக்கேற்ற வாழ்க்கை முறைமையின் குணாதிசயங்கள், அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலாத்தியர் 5:22, 23). உலகத்தானுடைய மாம்சத்திற்கேற்ற கிரியைப் போல ஆவிக்கேற்ற குணாதி சயத்தின் தன்மை பரிசுத்த ஆவியினுடைய வழி நடத்துதலினால் வெளிப்படும். ஒரு கிறிஸ்தவன் இப்படிப்பட்ட கனியைக் கொடுக்கும்போது அன்பு மற்றும் சந்தோஷம் உள்ளவனாய், சமாதானம் மற்றும் நீடிய பொறுமை, தயவு மற்றும் நற்குணம், விசுவாசம் மற்றும் சாந்தம், மற்றும் இச்சையடக்கம் உள்ளவனாய் இருக்கிறான்.

*இந்த இரண்டு வாழ்வுமுறைமைகளின் பின்விளைவுகளிலும் கூட ஒரு எதிருவமை உள்ளது.* மாம்சத்திற்கேற்ற கிரியைகளை பழகுபவர்கள் "தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள மாட்டார்கள்" (5:21). பவுல் நித்திய பங்கான இராஜ்யத்தைக்குறித்து பேசுகிறார் (2 பேதுரு 1:11); வேறு வார்த்தையில் கூற வேண்டுமானால் மனந்திரும்புதல் இல்லாமல் இப்படிப்பட்ட வாழ்க்கை முறைமையை பின்பற்றுகிறவர்கள் பரலோகத்திற்கு செல்ல முடியாது! இதை கைக்கொள்ளுகிறவர்கள், அதாவது ஆவியின் வழியில் நடக்கிறவர்கள் "நித்திய இராஜ்யத்தில் பங்கடைவார்கள்." பவுல் குறிப்பிடும் போது "ஆவிக்கேற்ற கனிக்கு" மாறாக "வேறொரு பிரமாணம் இல்லை" என்றார். ஆவிக்கேற்ற கனியை கொடுப்பவர்களுக்கு எந்த விதமான அபராதமும் நிர்ணயிக்கப்படவில்லை, எந்த வித தண்டனையும் தேவையில்லை என்றே அவர் அர்த்தப்படுத்தினார். எந்த வாழ்க்கை முறைமையை நாம் தெரிந்தெடுக்கிறோம் என்பது நாம் நம்முடைய நித்தியத்தை எங்கு கழிக்கப்போகிறோம் என்பதை நிர்ணயிக்கும்!

## இந்த வசனம் எப்படி குடும்பத்திற்கு பொருந்தும்?

இந்த வசனத்தை நம்முடைய குடும்பத்தில் செயல்படுத்தி நம்முடைய குடும்பத்திலிருப்பவர்களுக்கு குணாதிசயத்தின் முக்கிய முக்கியத்துவத்தை வலியுறுத்தவேண்டும். எந்த ஒரு காரியம் கிறிஸ்த குடும்பத்தைக் கட்டுகிறது?

*கிறிஸ்தவர்கள் - அதாவது கிறிஸ்தவராக மாறியவர்கள் உண்மையாகவே பரிசுத்த ஆவியானவரைத் தங்களில் தங்க வைத்திருப்பவர்களே. பரிசுத்த ஆவியானவரை தங்கள் வாழ்வில் கனி தருவதற்கு அனுமதித்தவர்களே, கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய பிரகாரம் வாழ்ந்தவர்களைக் கொண்ட குடும்பமே மிகவும் வெற்றி பெற்ற குடும்பமாகும்.*

*நாம் பெயர் கிறிஸ்தவர்களாக மட்டும் இருக்கக் கூடாது. அது நமது வாழ்க்கை முறையிலும் இருக்கவேண்டும். பவுல் இந்த கருத்தினை 5:25ல் மேற்கோள் காட்டியுள்ளார்: "நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்." நாம் அந்த ஆவியானவராலே ஜீவிக்கிறோமா? ஆம், ஆவியானவர் நம்மை உயிர் பிழைக்கச் செய்தார்! நாம் கிறிஸ்தவர்களாக இருக்க காரணமே பரிசுத்த ஆவியானவர் நமக்கு செய்தவைகளினிமித்தமே. ஆதலால் நாம் ஆவியின்படி நடப்போம். நாம் கிறிஸ்தவர்களானால் அதைப்போல் ஜீவிப்போம்!*

*நாம் ஆவிக்கேற்ற கனி கொடுப்பதினாலும், அல்லது கொடுக்காதிருப்பதினாலும் எப்படி, நம்முடைய குடும்பம் பாதிக்கப்படுகிறது? நாம் இந்த பாடத்தின் தொடக்கத்திலே நமது மாம்சத்திற்கேற்ற வாழ்க்கை முறைமையினாலும், ஆவிக்கேற்ற முறைமையினாலும் ஒரு திருமணத்தை கட்டவோ முறிக்கவோ முடியும் என்ற கருத்தைச் சொன்னோம். ஒரு கணவனாவது, மனைவியாவது விபச்சாரத்தில் ஈடுபடும்போது ஒரு திருமணத்தைத் தனித்தனியே உடைக்க முடியும். பொறாமை நிறைந்தவர்களாய் இருக்கும்போதோ, மதுபானக்காரராயிருக்கும்போதோ, தன்னலம் உள்ளவர்களாய் இருக்கும் போதோ, அல்லது மற்ற மாம்ச கிரியைகளால் குற்றம் பிடிக்கப்பட்ட போதோ ஒரு திருமணத்தை பிரிக்க முடியும். இதற்கு மாறாக, ஆவியின் கனியானது திருமணத்தை ஊன்ற கட்டுவதற்கு உதவுகிறது. ஒரு கணவன் ஆவிக்கேற்ற குணாதிசயத்தோடு ஆவிக்கேற்ற கனிகளை கொடுக்கும் போது அந்த திருமணம் நீடித்திருக்கும். அப்படியே ஒரு மனைவி தன்னுடைய கிரியைகளில் ஆவிக்கேற்ற கனியை கொடுக்கிறவர்களாய் ஜீவிக்கும்போது அந்த திருமணம் நிலைத்திருக்கலாம்.*

*வெற்றிகரமான திருமண வாழ்க்கையின் அல்லது சந்தோஷமான குடும்பத்தின் திறவுகோல் நாமே. நாம் ஒவ்வொருவரும் நம்மை கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், "நான் எந்த வாழ்க்கை முறைமையை சுவீகரித்துக் கொண்டிருக்கிறேன்?"*

## முடிவுரை

*என் மனைவி ஷார்லோட்டும் நானும் திருமணசம்பந்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டோம். அது பவுல் ஃபால்க்னர் மற்றும் கார்ல் பிரிச்சின் என்பவர்களால் நடத்தப்பட்டது. அந்த கருத்தரங்கின் முதல் பாடம் என்னை மிகவும் கவர்ந்தது. அந்த பாடம் ஒவ்வொரு தம்பதியினரும் திருமண பந்தத்தில் நிலை நிற்பதற்கு ஆவியில் வளர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பதாக இருந்தது. அநேக தேவ வசனங்கள் கோடிட்டு காண்பிக்கப்பட்டது - உதாரணமாக, 2 பேதுரு 1:5-7, ல் ஏழு கிறிஸ்தவ பண்புகள் கூறப்பட்டுள்ளது: அது உன்னதமான நீதியின் பண்பாடு, தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், மற்றும் அன்பு.*

*நான் சற்றே நினைத்துப் பார்க்கும்போது அந்த பேச்சாளர் கூறியது நினைவுக்கு வருகிறது. "நாம் இப்படிப்பட்டவர்களாய் இருந்தால் நாம் நம்முடைய திருமண வாழ்வில் நன்றாய் தொடர முடியும்." அந்த கருத்தினை நான் பாராட்டுவதோடு அங்கிகரிக்கிறேன். வெற்றிகரமான குடும்பம் ஒன்றைக் கொண்டிருக்க, எல்லாவற்றிற்கும் மேலாக, அந்தக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும், கிறிஸ்தவனாக வாழ்ந்து, அவன் அல்லது அவள் தன்னாலான மட்டும் விசுவாசத்தோடு தேவனுக்கு ஊழியம் செய்வதே சிறந்த வழியாகும்.*

*ஒருவேளை திருமண வாழ்வில் பிரச்சனைகள் எழலாம், நாம் அதற்கான தீர்வுகாணவேண்டும், அல்லது ஒரு குடும்பமானது மன அழுத்தத்திற்குள் சென்று சந்தோஷம் இழந்தவர்களாய் குறிப்பிட்ட காலகட்டத்திற்கு காணப்படலாம். இப்படிப்பட்டதான சூழ்நிலைகளில் திறமையானவர்களிடம் நாம் அறிவுரை பெற்றுக் கொள்ள வேண்டும். சூழ்நிலைகள் என்பது நமது வாழ்வில் நிச்சயமற்றது, ஆனால் ஒன்று உண்மை: சந்தோஷமான குடும்பத்தின் தொடக்கம் என்பது ஆவியானவர் நமது வாழ்வுக்குள் வருவதை அனுமதிக்கவும், அவர் நம்மை நடத்தி அவர் நம்மில் கனி கொடுக்கும்படி ஜீவிப்பதே ஒரு நல்ல தொடக்கமாக இருக்கிறது!*